Copyright Reserved

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

No of pages: 12

# Executive Level

## Management Accounting Information

## (Pilot Paper)

**<u>பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்</u>**

(1) அனுமதிக்கப்பட்ட காலம்: 3 மணித்தியாலம்

(2) பிரிவு 1(a): 10 பல்தேர்வு வினாக்கள் (MCQs) – **எல்லா வினாக்களும் கட்டாயமானவை**

பிரிவு 1(b): 10 உப வினாக்கள் – **எல்லா வினாக்களும் கட்டாயமானவை**

பிரிவு 2: 4 வினாக்கள் – **ஏதாவது 3 வினாக்களுக்கு விடை அளிக்கவேண்டும்.**

பிரிவு 3: 1 வினா – **கட்டாயமானது**

(3) பிரிவு 1(a) க்கான விடைகளுக்கு உமக்குத் தரப்படும் விசேட விடைத்தாளில் உரிய வினா இலக்கத்திற்கு எதிரே மிகவும் பொருத்தமான விடையின் இலக்கத்தை எழுதவேண்டும்.

ஏனைய சகல பிரிவுகளின் விடைகளை தரப்படும் விடைப் புத்தகத்தில் ஏழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவினதும் விடையினை தனியான பக்கத்தில் ஆரம்பிக்கவும்.

(4) விடைகள் யாவும் நீர் பரீட்சை எழுத **விண்ணப்பித்த அதே ஒரு மொழியில்** எழுதப்பட வேண்டும்.

# K E 2

மார்ச் 2015

# பிரிவு 1

| |
|---|
| *எல்லா இருபது வினாக்களும் கட்டாயமானவை.*<br>*பிரிவு 1 க்கான மொத்தப் புள்ளிகள்: 50 புள்ளிகள்.*<br>*இந்தப் பிரிவுக்கு பரிந்துரைக்கப்பட்ட காலம் 90 நிமிடங்கள்.* |

**வினா இல. 01**

**1(a):** மிகவும் பொருத்தமான விடையினை தெரிவுசெய்க

(மொத்தம் 20 புள்ளிகள்)

1.1. வாடிக்கையாளருக்கு சிறந்த பயனளிக்கும் ஊக்குவிப்புக் கொடைமுனைவினை இனங்காண்க.

A. ஒன்றை வாங்கி, இரண்டாவதில் 50% கழிவு பெறுங்கள்.
B. இரண்டை வாங்கினால் மூன்றாவது இலவசம்.
C. மூன்றை வாங்கி மேலும் இரண்டினை இலவசமாக பெறுங்கள்
னு. நான்கினை வாங்கி சகல கொள்வனவுகளிலும் 35% கழிவு பெறுங்கள்

**(2 புள்ளிகள்)**

1.2. ஒரு ஆரம்ப காசு வெளிப்பாய்வினையும் அதனைத் தொடர்ந்து ஒரு தொடர் காசு உட்பாய்வுகளையும் கொண்ட செயற்திட்டத்தில் அதன் பிரயோகிக்கக்கூடிய கழிவு விகிதம் வீழ்ச்சியடையும்போது கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றினை இனங்காண்க:

A. நிகர இற்றைப் பெறுமதி (NPV) அதிகரிக்கும்
B. அக விளைவு விகிதம் (IRR) அதிகரிக்கும்
C. மீள்செலுத்துகைக் காலம் குறைவடையும்
D. கணக்கீட்டு வருவாய் விகிதம் அதிகரிக்கும்

**(2 புள்ளிகள்)**

1.3. ஒரு நிதிநிறுவனம் இணங்கப்பட்ட ஒரு தொகையை 1/1/2015 திகதி வைப்புச் செய்தால் 31/12/2025 திகதியில் ஆரம்பித்து 10 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ரூபா 100,000 செலுத்துவதற்கு அழைப்பு விடுக்கின்றது. இந்த முதலீட்டிலிருந்து 12% வருவாய் எதிர்பார்க்கப்படின், ஒருவர் முதலிடும் அதிகபட்ச தொகையை கிட்டிய ஆயிரம் ரூபாய்களில் கூறுக:

A. ரூபா 1,000,000
B. ரூபா 620,000
C. ரூபா 322,000
D. ரூபா 182,000

**(2 புள்ளிகள்)**

1.4. ஒரு நிருமான ஒப்பந்தத்தின் மதிப்பிடப்பட்ட இலாபம் ரூபா 50 மில்லியன், ரூபா 90 மில்லியன் மற்றும் ரூபா 120 மில்லியனாக இருப்பதற்கான நிகழ்தகவுகள் முறையே 1/2, 1/3 மற்றும் 1/6 ஆகும். இந்த ஒப்பந்தத்தின் எதிர்பார்க்கப்படும் பெறுமதி (expected value):

A. ரூபா 75 மில்லியன்
B. ரூபா 120 மில்லியன்
C. ரூபா 200 மில்லியன்
D. ரூபா 260 மில்லியன்

**(2 புள்ளிகள்)**

1.5. கீழே A, B, C மற்றும் D எனும் நான்கு தரவுத் தொடைகள் தரப்பட்டுள்ளன.

| தரவுத் தொடை | A | B | C | D |
|---|---|---|---|---|
| இடை | 150 | 175 | 200 | 250 |
| நியம விலகல் | 25 | 20 | 25 | 30 |

அதிக மாறற்தகவுடைய (most volatile) தரவுத் தொடை:

A. A
B. B
C. C
D. D

**(2 புள்ளிகள்)**

1.6. கீழ்வருவனவற்றுள் சிக்கன கட்டளைக் கணிய (EOQ) மாதிரியமைப்பு பற்றிய **தவறான** எடுகோள்:

A. கேள்வி மாறாதிருக்கும்
B. அடைகைக் காலம் (Lead time) " ஜ்யம்
C. EOQ வினை அடைவதற்கு போதிய வளங்கள் கிடைக்கப்பெறும்
D. மீள்நிரப்பல் (Replenishment) உடனடியாக நடைபெறும்

**(2 புள்ளிகள்)**

1.7. தொக்கு மட்டம் அதிகரிக்கும் காலத்தில் உறிஞ்சற் கிரயமிடலின் (AC) கீழும், எல்லைக் கிரயமிடலின் கீழும் அறிக்கையிட்ட இலாபங்களை ஒப்பிடும்போது:

A. AC இலாபம் அதிகமானதாக இருப்பதுடன், இறுதித் தொக்குப் பெறுமதி MC இலும் பார்க்க குறைவானதாக இருக்கும்.
B. AC இலாபம் மற்றும் இறுதித் தொக்குப் பெறுமதி இரண்டுமே MC இலும் பார்க்க அதிகமானதாக இருக்கும்.
C. MC இலாபம் அதிகமானதாக இருப்பதுடன், இறுதித் தொக்குப் பெறுமதி AC இலும் பார்க்க குறைவானதாக இருக்கும்.
D. MC இலாபம் மற்றும் இறுதித் தொக்குப் பெறுமதி இரண்டுமே AC இலும் பார்க்க அதிகமானதாக இருக்கும்

**(2 புள்ளிகள்)**

1.8. கீழே தரப்பட்டவற்றில் சாதகமான நேர்பொருள் பாவனை முரணை (favourable direct material usage variance) **விபரிக்காதது**:

A. நியமத்தில் குறிப்பிட்டதை காட்டிலும் உயர்ந்த தரத்திலான பொருட்களை உபயோகித்தல்
B. பொருட்கள் விரயமாகும் வீதங்களில் வீழ்ச்சி
C. வழங்குனரின் தரக் கட்டுப்பாட்டு செவ்வைகளில் (quality control checks) அதிகரிப்பு
D. பாதிட்டதிலும் பார்க்க குறைவான உற்பத்தி அளவினை அடைதல்

**(2 புள்ளிகள்)**

1.9. 100 விலைப்பட்டியல்களைக் கொண்ட எளிய எழுமான மாதிரியொன்றின் இடைப் பெறுமதி (mean value) ரூபா 600 ஆகவும் நியம விலகல் (standard deviation) ரூபா 100 ஆகவும் உள்ளது. குடில இடையின் 95% உயர் நம்பிக்கை எல்லை (upper confidence limit) கிட்டத்தட்ட:

A. ரூபா 500
B. ரூபா 580
C. ரூபா 620
D. ரூபா 700

**(2 புள்ளிகள்)**

1.10. ஆராய்ச்சி நிறுவனமொன்று எழுமானமாக 100 உயர்தர வகுப்பு மாணவர்களை கொண்ட மாதிரியை தொடர்புகொண்டு, அவர்களில் 20% மாணவர்கள் ஏனைய கற்கைநெறிகளை விட தமது வாடிக்கையாள நிறுவனம் நடாத்தும் தொழில்சார் கற்கைநெறியினை விரும்புவதாக கண்டறிந்தனர். வாடிக்கையாளர் நிறுவனம் வழங்கும் கற்கைநெறியினை விரும்பும் சகல உயர்தர வகுப்பு மாணவர்களின் விகிதாசாரத்திற்கான 95% (Z=2) நம்பிக்கை இடைவெளி (confidence interval):

A. 12% முதல் 28% வரை
B. 16% முதல் 24% வரை
C. 18% முதல் 22% வரை
D. 19% முதல் 21% வரை

**(2 புள்ளிகள்)**

**1(b):** வினவப்பட்ட வினைச் சொற்களுக்கு கவனம்செலுத்தி, எல்லா வினாக்களுக்கும் சுருக்கமாக விடை எழுதுக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

1.11. ஒரு கம்பனி 1,800,000 அலகுகள் மொத்த இயல்வலு உடைய எந்திரத்தினை கொள்வனவுசெய்ய திட்டமிடுகின்றது. விற்பனை எதிர்வுகூறல் அடிப்படையில், முதலாவது ஆண்டில் 100,000 அலகுகளும் அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டிலும் 25,000 அலகுகள் அதிகமாகவும் உற்பத்தி செய்யப்படும்.

**செய்யவேண்டியது:**

எந்திரத்தின் முழு இயல்வலுவை பயன்படுத்துவதற்கு எத்தனை ஆண்டுகள் செல்லும் எனக் **கணிக்குக.**

**(3 புள்ளிகள்)**

1.12. நீண்டகால செயற்திட்டம் ஒன்றில் ரூபா 7.2 மில்லியன் முதலீடு அடுத்த 25 ஆண்டுகளுக்கு நிகர நேர்க் காசுப்பாய்வினை தருமென எதிர்பார்க்கப் படுகின்றது. முதலாவது ஆண்டில் ரூபா 100,000 நிகர காசுப்பாய்வு அடுத்து வரும் ஆண்டுகளில் முன்னைய ஆண்டைவிட 20% இனால் அதிகரிக்கும்.

**செய்யவேண்டியது:**

செயற்திட்ட மீள்செலுத்துகைக் காலத்தை கிட்டிய ஆண்டுகளில் **கணிக்குக**.

**(3 புள்ளிகள்)**

1.13. இன்று முதலிடப்படும் தொகை 5 ஆண்டுகளில் இரண்டு மடங்காகும் எனும் முதலீட்டுத் திட்டத்தை ஒரு நிதிநிறுவனம் கொடைமுனைவு செய்கின்றது.

**செய்யவேண்டியது:**

இந்த முதலீட்டின் வருடாந்த விளைவு வீதத்தினை (Annual Effective Rate) இரு தசமதானங்களுக்கு திருத்தமாக கணிக்குக.

**(3 புள்ளிகள்)**

1.14. 1994 = 100 இனை அடிப்படையாகக் கொண்டு, 2008 ஆம் ஆண்டின் விலைச் சுட்டி 129 ஆக இருந்தது. அந்த ஆண்டில் அடிப்படை ஆண்டு 2008 = 100 ஆக மாற்றப்பட்டது. 2010 ஆண்டில் புதிய சுட்டி 110 ஆக இருந்தது. 1994 ஆம் ஆண்டிலிருந்து விலைமாற்றங்களை தொடர்ச்சியாக மதிப்பிடுவதற்கு,

**செய்யவேண்டியது:**

1994 இனை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 2010 ஆண்டின் விலைச் சுட்டியினை **கணிக்குக.**

**(3 புள்ளிகள்)**

1.15. ஒரு தொழிற்சாலையின் சாதாரண உற்பத்தி மாதத்திற்கு 1,000 அலகுகள். ஒவ்வொரு மாதமும் நிலையானகிரயம் மாறாதெனக் கொள்க. ஜனவரி மாதம் 1,210 அலகுகள் ரூபா 3,394,000 மொத்தக் கிரயத்திலும், பெப்ரவரி மாதம் 990 அலகுகள் ரூபா 3,086,000 மொத்தக் கிரயத்திலும் உற்பத்தி செய்யப் பட்டன. மார்ச் மாத உற்பத்தி 1,040 அலகுகள்.∴ விற்பனையின் அளவு 1,200 அலகுகள்.∴ எல்லைக் கிரய அடிப்படையில் இலாபம் ரூபா 8,160,000.

**செய்யவேண்டியது:**

உறிஞ்சல் கிரயமிடல் முறையின்கீழ் இலாபத்தினை **கணிக்குக**.

**(3 புள்ளிகள்)**

1.16. சார்ட் ஆட்டொமோபைல்ஸ் (CA) விற்பனைசெய்யும் 3 உற்பத்திப் பொருட்கள் P, Q மற்றும் R இன் பங்களிப்பு / விற்பனை விகிதங்கள் (C/S ratios) முறையே 15%, 10% மற்றும் 25% ஆகும். P மற்றும் Q பொருட்களின் வருமானம் முறையே ரூபா10 மில்லியன் மற்றும் ரூபா 20 மில்லியன். CA யின் மொத்த நிலையான கிரயம் ரூபா 5.5 மில்லியன். எதிப்பாக்கும் இலாபம் ரூபா 1 மில்லியன்.

**செய்யவேண்டியது:**

எதிர்பார்க்கும் இலாபத்தை அடைவதற்கு உற்பத்திப் பொருள் R இனால் பெறப்படவேண்டிய வருமானத்தினை **கணிக்குக**.

**(3 புள்ளிகள்)**

1.17. ஒரு கம்பனி அதன் விற்பனை அளவின் காலாண்டுப் போக்கினை (quarterly trend) எதிர்வுகூற கீழே தரப்பட்டுள்ள பிற்செலவுக் கோட்டினை பிரயோகித்து, பின்னர் பருவகால சுட்டியினால் செய்மையாக்கம் செய்கின்றது.
பிற்செலவுக் கோடு: TV = 4,000 + 80N. இங்கு TV போக்கின் அளவும், N எத்தனையாவது காலாண்டு என்பதுமாகும். காலாண்டுகள் 1, 2, 3 மற்றும் 4 க்கான பருவகால சுட்டிகள் முறையே 105%, 80%, 95% மற்றும் 120% .

**செய்யவேண்டியது:**

இரண்டாவது ஆண்டின் 3ம் காலாண்டிலிருந்து 4ம் காலாண்டு வரையான காலத்தில் விற்பனையின் அளவில் எதிர்வுகூறப்படும் அதிகரிப்பு அல்லது வீழ்ச்சியை கணிக்குக.

**(3 புள்ளிகள்)**

1.18. தொலைபேசி நிலையமொன்றில் அழைப்புக் காலம், இடை 10 நிமிடங்கள்.∴ விலகற்திறன் (variance) 25 நிமிடங்கள் ஆன செவ்வன் பரம்பலாகும்.

**செய்யவேண்டியது:**

20 நிமிடங்களை அதிகரிக்கும் அழைப்புக்களின் சதவீத்தை கணிக்குக.

**(3 பள்ளிகள்)**

1.19. செயற்பாட்டு அடிப்படைக் கிரயமிடலானது (Activity based costing) உற்பத்திப் பொருட்களின் வளங்களின் நுகர்வு அடிப்படையில் மேந்தலைகளின் சிறந்த ஒதுக்கத்திற்கு ஏதுவாகின்றது.

**செய்யவேண்டியது:**

செயற்பாடு அடிப்படைக் கிரயமிடல் சம்பந்தமான முக்கியமான படிமுறைகள் நான்கினையும் கூறுக.

**(3 புள்ளிகள்)**

1.20. ஒரு உற்பத்திப் பொருளுக்கு, அடுத்த மாதத்திற்காக கீழ்வரும் மதிப்பீடுகள், சாத்தியமான வழு எல்லைகளுடன் (margin of error) (சக அல்லது சய), தரப்பட்டுள்ளன.

| உருப்படி | ரூபா | வழு எல்லை (+/-) |
|---|---|---|
| அலகின் விற்பனை விலை | 80 | 10% |
| அலகின் மாறுங் கிரயம் | 50 | 20% |
| மாதத்திற்கான நிலையான கிரயம் | 3,000,000 | 10% |

**செய்யவேண்டியது:**

சமப்பாட்டு விற்பனை அளவின் (breakeven sales volume) உயர்ந்தபட்ச வழுவை கணிக்குக.

**(3 புள்ளிகள்)**

# பிரிவு 2

| |
|---|
| *தரப்பட்டுள்ள நான்கு வினாக்களில் மூன்று வினாக்களுக்கு விடை தருக.*<br>*பிரிவு 2 க்கான மொத்தப் புள்ளிகள்: 30 புள்ளிகள்.*<br>*இந்தப் பரிவுக்கு பரிந்துரைக்கப்பட்ட காலம் 54 நிமிடங்கள்* |

**<u>வினா இல. 02</u>**

சுகத் ரீ பக்கேஜிங் (STP) கம்பனி தேயிலையை பக்கட்டுகளில் அடைத்து விற்பனை செய்கின்றது. அதன் இறுதிக் காலாண்டிற்கான செயற்பாடுகள் கீழ்வருமாறு:

| **STP Tea**<br>**இறுதிக் காலாண்டிற்கான சாதனைக் கூற்று** | | |
|---|---|---|
| | **ரூபா. '000** | **ரூபா. '000** |
| விற்பனை (20,000 பக்கட்டுகள்) | | 1,800 |
| விற்கப்பட்ட பொருட்களின் கிரயம்: | | |
| நிலையான உற்பத்திக் கூலி | 60 | |
| துண்டு வேலைக் (Piece work) கூலி | 270 | |
| | 330 | |
| பொருட்கள் | 1,200 | |
| | | 1,530 |
| மொத்த இலாபம் | | 270 |
| வினியோகத்தர் தரகு (ரூபா15 / பக்கட்) | 300 | |
| நிலையான நிருவாகக் கிரயம் | 90 | |
| | | 390 |
| | | (120) |

அடுத்த காலாண்டிற்கு கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன:

1. நிலையான உற்பத்திக் கூலியும் நிலையான நிருவாகக் கிரயமும் மாற்றமடையா.
2. துண்டுவேலைக் கூலி வீதம் அலகொன்றிற்கு ரூபா 15 ஆக அதிகரிக்கும்.
3. விற்பனை விலையில் ஒவ்வொரு ரூபா 3 வீழ்ச்சி / அதிகரிப்பிற்கு, கேள்வியானது ஒரு காலாண்டிற்கு 1000 அலகுகளால் அதிகரிக்கும் / குறைவடையும்.

**செய்யவேண்டியது:**

1. ஒரு அலகின் எல்லைக் கிரயத்தினை **கணித்து**, அடுத்த காலாண்டிற்கான மொத்த கிரயச் சார்பினை (cost function) **எழுதுக** **(2 புள்ளிகள்)**
2. அடுத்த காலாண்டின் கேள்விச் சார்பினையும் அதன்மூலம் மொத்த வருமானம் மற்றும் எல்லை வருமானச் சார்புகளையும் **இனங்காண்க.** **(5 புள்ளிகள்)**
3. அடுத்த காலாண்டில் உத்தம (optimum) உற்பத்தி, அலகொன்றின் விற்பனை விலை மற்றும் உத்தம மட்டத்தில் மொத்த இலாபத்தை கணிக்குக. **(3 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**<u>வினா இல. 03</u>**

கீழே தரப்பட்டுள்ள தரவுகள் மூன்று கட்ட உற்பத்திச் செயன்முறைகளை கொண்ட உற்பத்தியில் ஜனவரி மாதத்தின் செயன்முறை – 2 தொடர்பானவையாகும்:

| | |
|---|---|
| செயன்முறை 1 இலிருந்து பொருள் உள்ளீடு | 5,000 units @ Rs. 194 per unit |
| சேர்க்கப்பட்ட பொருட்கள் | ரூபா 217,500 |
| நேர் கூலி | ரூபா 400,000 |
| மேந்தலைகள் | ரூபா 308,100 |

செயன்முறை முடிவடைந்ததும் இழப்புக்கள் இனங்காணப்படுவதுடன், ஜனவரி மாதம் 800 அலகுகள் ஒடிவடைந்தன. மாதத்தில் உள்ளிட்ட அலகுகளின் எண்ணிக்கையில் 10% சாதாரண இழப்பாக கொள்ளப்படும். ஒடிவுப் பொருட்கள் அலகொன்று ரூபா 50 விலையில் விற்கப்படலாம்.

ஆரம்ப புத்துருவாகும் வேலை 600 அலகுகளின் ” ர்த்தி மட்டம் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| செயன்முறை 1 இலிருந்து பொருள் உள்ளீடு | 100% | ரூபா 75,000 |
| சேர்க்கப்பட்ட பொருட்கள் | 60% | ரூபா 25,000 |
| கூலி | 30% | ரூபா 50,000 |
| மேந்தலை | 30% | ரூபா 14,400 |
| மொத்தம் | | ரூபா 164,400 |

ஆரம்ப புத்துருவாகும் வேலை 1,000 அலகுகளின் ” ர்த்தி மட்டம் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| செயன்முறை 1 இலிருந்து பொருள் உள்ளீடு | 100% |
| சேர்க்கப்பட்ட பொருட்கள் | 75% |
| கூலி | 40% |
| மேந்தலை | 20% |

கம்பனி நிறையேற்றிய சராசரி விலையிடல் முறையினை உபயோகிக்கின்றது.

**செய்யவேண்டியது:**

1. அலகுகளின் எண்ணிக்கை தொடர்பாக செயன்முறை - 2 இன் உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகளின் கணக்கிணக்கக் கூற்றினை **தயாரிக்குக.**

   **(2 புள்ளிகள்)**

2. ஜனவரி மாதத்தில் உற்பத்திசெய்த சமான அலகுகளின் (equivalent units) எண்ணிக்கை, கிரய மூலகங்களின் அடிப்படையிலும் மொத்தமாகவும் சமான அலகொன்றின் கிரயங்கள் ஆகியவற்றை **கணிக்குக**. சாதாரண இழப்பினை வேறாக இனங்காண்க.

   **(6 புள்ளிகள்)**

3. செயன்முறை 3 க்கு மாற்றப்படும் உற்பத்திக் கிரயத்தையும், இறுதிப் புத்துருவாகும் வேலைப் பெறுமதியையும் கணிக்குக.

   **(2 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**<u>வினா இல. 04</u>**

4.1. கீழ்வரும் தகவல்கள் ஒரு உற்பத்திக் கம்பனி பயன்படுத்தும் மூலப்பொருள் 'X' தொடர்புபட்டதாகும்.

| | |
|---|---|
| வாரமொன்றிற்கு உயர்ந்தபட்ச நுகர்வு | 9,000 அலகுகள் |
| வாரமொன்றிற்கு குறைந்தபட்ச நுகர்வு | 3,000 அலகுகள் |
| மீள்கட்டளைக் கணியம் (Re-order quantity) | 36,000 அலகுகள் |
| அடைகைக் காலம் (Lead time) | 4 – 6 வாரங்கள் |

**செய்யவேண்டியது:**

பொருள் X தொடர்பாக கீழ்வருவனவற்றினை **கணிக்குக**.

1. மீள்கட்டளை மட்டம் (Re-order level)

**(1 புள்ளி)**

2. உயர்ந்தபட்ச தொக்கு மட்டம் (Maximum level)

**(1 புள்ளி)**

3. குறைந்தபட்ச தொக்குமட்டம் (Minimum level)

**(1 புள்ளி)**

4. சராசரி மட்டம் (Average level)

**(1 புள்ளி)**

4.2. கீழ்வரும் தகவல்கள் ஒரு உற்பத்திக் கம்பனி பயன்படுத்தும் மூலப்பொருள் 'Y' தொடர்புபட்டதாகும.

| | |
|---|---|
| 'Y' யின் விலை | அலகொன்று ரூபா 25 |
| நுகர்வு | ஆண்டிற்கு 8,000 அலகுகள் |
| ஒரு கட்டளைக்கான கிரயம் | ரூபா 100 |
| வட்டி விகிதம் | ஆண்டிற்கு 10% |

**செய்யவேண்டியது:**

1. Y யின் சிக்கன கட்டளைக் கணியத்தை (EOQ) **கணிக்குக**.

**(2 புள்ளிகள்)**

2. Y யின் ஆண்டொன்றிற்கான மொத்த தொக்கு வைத்திருத்தல் கிரயம் (Total Holding Cost) மற்றும் மொத்த கட்டளைக் கணியம் ஆகியவற்றை **கணிக்குக**.

**(2 புள்ளிகள்)**

3. EOQ முறையினை பயன்படுத்துவதில் முகங்கொடுக்கவேண்டிய நடைமுறைப் பிரச்சினைகள் இரண்டை **விபரிக்குக.**

**(2 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**<u>வினா இல. 05</u>**

அல்பா எனும் தனியான ஒரு பொருளை உற்பத்திசெய்யும் கம்பனியின் ஜனவரி மாதத்திற்கான உண்மை உற்பத்திக் கிரயம் மற்றும் முரண்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஆரம்ப அல்லது இறுதிப் புத்துருவாகும் வேலைகள் இருக்கவில்லை. நியம எல்லைக் கிரயமிடல் முறைமை கடைப்பிடிக்கப்பகின்றது.

| | |
|---|---|
| அல்பாவின் உண்மை உற்பத்தி | 9,000 அலகுகள் |
| | |
| **மாதத்தில் இறுக்கப்பட்ட உண்மைக் கிரயங்கள்:** | **ரூபா '000** |
| கொள்வனவு செய்து நுகரப்பட்ட நேர்பொருள் (1,000கி.கி) | 300 |
| நேர்கூலி 5,000 மணித்தியாலம் | 390 |
| மாறும் உற்பத்தி மேந்தலை | 122 |
| | |
| **முரண்கள்:** | **ரூபா '000** |
| நேர் பொருள் விலை முரண் | 30 சாதகம் |
| நேர் பொருள் பாவனை முரண் | 33 பாதகம் |
| நேர் கூலி விகித முரண் | 10 சாதகம் |
| நேர் கூலி வினைத்திறன் முரண் | 32 சாதகம் |
| மாறும் உற்பத்தி மேந்தலை செலவின முரண் | 22 பாதகம் |
| மாறும் உற்பத்தி மேந்தலை வினைத்திறன் முரண் | 8 சாதகம் |

மாறும் உற்பத்தி மேந்தலைகள் பயன்படுத்திய கூலி மணித்தியால அடிப்படையில் மாற்றமடைகின்றது.

**செய்யவேண்டியது:**

1. ஒவ்வொரு கிரய மூலகத்தினதும் அலகுக் கிரயங்களையும் ஒரு அலகு அல்பாவில் அவை நுகரப்பட்ட அளவையும் காட்டி, ஒரு அலகு அல்பாவின் நேர் பொருள், நேர் கூலி மற்றும் மாறும் உற்பத்தி மேந்தலை ஆகிய கிரய மூலகங்களின் நியம கிரயங்களை **கணிக்குக**.

   **(6 ½ புள்ளிகள்)**
2. நியமங்கள் வழமையாக வகுக்கப்படும் மூன்று பரந்த வகைப்படுத்தல்களை **கூறுக.** இவற்றுள் எது விரும்பப்படும் என ஆராய்க.

   **(3 ½ புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

# பிரிவு 3

*இது கட்டாயமாக விடையளிக்கவேண்டிய வினாவாகும்.*
*பிரிவு 3 க்கான மொத்தப் புள்ளிகள்: 20 புள்ளிகள்*
*இந்தப் பகுதிக்கு பரிந்துரைக்கப்பட்ட காலம்: 36 நிமிடங்கள்*

**வினா இல. 06**

ஒரு வங்கி அதன் வீட்டுக்கடன் முறைப்படுத்தலை (processing) வரையறுக்கப்பட்ட அப்ளிகேஷன் புறசசிங் சேவிஸசுக்கு (APSL) பாரங்கொடுத்துள்ளது (outsourced). APSL முறைப்படுத்தும் கடன் தொகையின் 0.5% இனை கட்டணமாக அறவிடுகின்றது.

2015 ஆண்டிற்கு பாதீடுசெய்த கடன்களின் சராசரித் தொகை ரூபா 2,000,000 ஆகும். 2015 ஆம் ஆண்டிற்கு பாதீட்டை தயாரிக்க கடன் விண்ணப்பம் ஒன்றிற்கு கீழ்வரும் கிரய மதிப்பீடுகளை APSL பயன்படுத்தியது:

| | |
|---|---|
| மாதத்திற்கு கடன்விண்ணப்ப எண்ணிக்கை | 90 |
| தொழில்சார் மனிதவள தேவைப்பாடு | 6 மணித்தியாலம்.'. ரூ400 / மணித்தி |
| ஆவண நிரப்புதற் செலவு | ரூபா1,000 |
| கடன் நாணயத்தன்மை மதிப்பீடு | ரூபா 1,200 |
| அஞ்சற் செலவுகள் | ரூபா 500 |

மாதமொன்றிற்கு அலுவலக பராமரிப்புக் கிரயம் ரூபா 310,000 ஆக மதிப்பிடப்பட்டது. முறைப்படுத்தும் கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கையை கணக்கிற் கொள்ளாது இந்தத் தொகை செலுத்தப்படவேண்டும்.

2015 மார்ச் மாதத்திற்கான உண்மைத் தரவுகள் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 120 |
| சராசரிக் கடன் தொகை | ரூபா 2,240,000 |
| ஒரு விண்ணப்ப தொழில்சார் மனிதவள தேவைப்பாடு | 7.2 மணித்தியாலம் ரூ420 / மணித்தி |
| ஆவண நிரப்புதற் செலவு | ரூபா 1,000 / விண்ணப்பம் |
| கடன் நாணயத்தன்மை மதிப்பீடு | ரூபா 1,250 / விண்ணப்பம் |
| அஞ்சற் செலவுகள | ரூபா 540 / விண்ணப்பம் |
| அலுவலக பராமரிப்பு | ரூபா 335,000 / மாதம் |

**செய்யவேண்டியது:**

1. ஆரம்ப மதிப்பீடுகளின் அடிப்படையில் 2015 மார்ச் மாதத்திற்கான APSL இன் ஆரம்ப பாதீட்டினை (நிலையான பாதீட்டினை) **தயாரிக்குக**.

**(4 புள்ளிகள்)**

2. விற்பனை அளவு மற்றும் நெகிழ்ச்சிப் பாதீட்டு முரண்களை (variances) இனங்கண்டு, 2015 மார்ச் மாதத்திற்கான APSL இன் நெகிழ்வுப் பாதீடு மற்றும் பாதீட்டு கட்டுப்பாட்டுக் கூற்றினை **தயாரிக்குக**.

**(12 புள்ளிகள்)**

3. 2015 மார்ச் மாதத்திற்கான தொழில்சார் மனிதவலு விலை மற்றும் வினைத்திறன் முரண்களை கணிக்குக.

**(4 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**